மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டமே காந்தி நூற்றாண்டு விழாவினையொட்டி, அங்கங்கே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அது இப்பொழுதுதான் புதிதாகத் துவங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வே. குருசாமி : தலைவர் அவர்களே, இந்த மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில் நடத்தப்படும் பள்ளிகள் எந்த முறையில் இருக்கும்? உயர் துவக்கப் பள்ளியில் ஆரம்பிக்கப்படுமா, அல்லது ஆரம்பப் பள்ளியில் ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : உயர் துவக்கப் பள்ளி, ஆரம்பப் பள்ளிகள், இரண்டுக்கும்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, பல கிராமங்களிலே பள்ளிக்கூடங்களில் கூரையில் பொத்தல், சுவர்களில் பொத்தல்; இவற்றிலிருந்தும் சுகாதாரமற்ற முறையிலே அப்படிப்பட்ட நிலையிலே பிள்ளைகள் படிக்க வேண்டி இருக்கிறது. அப்படிப்பட்ட குறைபாடுகளை உடனடியாக நிவர்த்திக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படிப்பட்டவற்றிற்கு ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்து கொள்வதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

குருந்தங்குளம் கிராம வருவாய்

*440 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், வீரனேந்தல் பஞ்சாயத்தில் சேர்ந்து இருக்கும் குருந்தங்குளம் ரெவின்யூ வரி அனைத்தும் பழையனூர் பஞ்சாயத்திற்குப் போய் சேர்ந்துவிடுவது உண்மையா?

(இ) பழையனூர் பஞ்சாயத்தோடு குருந்தங்குளம் கிராமத்தைச் சேர்ப்பது பற்றி அரசுக்கு உத்தேசம் உண்டா?